St. Joseph's Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 69-71

St. Joseph's Journal of Humanities and Science

ISSN: 2347 - 5331

http://sjctnc.edu.in/6107-2/




# புதிய அரியணை ஏறுகிறாள் தமிழ் அன்னை

- முனைவர். அ. அன்னம்மாள் *

## முன்னுரை

கல் தோன்றி மண்தோன்றா காலத்தே தோன்றிய மூத்தகுடி தமிழ்குடி. அத்தகைய பழமை வாய்ந்தது தமிழ்மொழி. 18-ஆம் நூற்றாண்டில் தொழில்புரட்சி தொடங்கி உலகின் முகம் மாறத் தொடங்கும் முன். எந்த இனமும், எந்த மொழியும் நாகரீகத்தின் முக்கிய பழநிலைகளான வேட்டையாடல், நாடோடியாய்த் திரிதல், கால்நடை மேய்த்தல், கடல்மேற்சேரல், உழவுசெய்தல் என்ற இந்த ஐந்து படிநிலையையும் எவரும் முழுமையாக எட்டவில்லை. இந்த படிநிலைக்கு தமிழர் இட்டபெயர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாம். இதை தமிழன் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முழுமையாக எட்டிவிட்டான் அப்போதே

**"புகழெனில் உயிரும் கொடிக்குவர் பழியெனில்**

**உலகோடு வரினும் கொள்ளலர்" என்றும்**

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

என்றும் இந்த ஒட்டுமொத்த உலகிற்கே கவிதை எழுதிவிட்டான். இப்படிப்பட்ட தமிழ் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு அரியணை ஏறி தன் ஆட்சியை சிறப்பாக செய்து வருகிறது. முதலில் வாய்மொழி என்ற அரியணை ஏறியது. பிறகு கல்வெட்டுகள் என்னும் அரியணை ஏறியது, பிறகு ஓலை சுவடுகள் என்னும் அரியணை ஏறியது. பிறகு காகித அச்சு என்னும் அரியணை ஏறியது இப்போது இறுதியாக மின்காந்த ஆற்றல் என்னும் புதிய அரியணையே ஏறுகிறது. ஒவ்வொரு முறையும் தன் இடத்தில் நின்றும் தன் நிறம் மாறாது சிறப்பாக ஆட்சி செய்து வருகிறது. இன்று அது எவ்வாறு ஆட்சி செய்கிறது என்று இப்பொழுது பார்ப்போம்.

## வாழ்க்கை

தமிழர் வாழ்விலும் அவர்களின் முன்னேற்றத்தில் தமிழ் ஒரு தனிபங்கை வகிக்கின்றது. ஆரிய வெள்ளம் பெருக்கெடுத்த போதும் முகலாய மேகம் சூழ்ந்தபோதும். தமிழ் தன் மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கி தன்னிச்சியாக நிற்கச் செய்தது. தன்னை அழிக்க வந்த அயலாரையே தனக்கு சேவகம் செய்யும்படி பணித்தது தமிழ். அதனாலேயே பல காப்பியங்களும், அறநூல்களும் எழுந்து தமிழரின் வாழ்வை காத்து வந்தது. இலை உதிர்ந்தாலும் அதன் தழும்பு அழிவதில்லை என்பதுபோல அயல்மொழியின் தாக்கங்கள் தமிழிலும் காணப்பட்டன. ஆனால் அதையே படிகல்லாய் மாற்றி அடுத்த நிலைக்கு ஏறி சென்றது. இதுபோன்ற பல மாற்றங்களால் தமிழனின் வாழ்வும், அறிவும் உலகையே திரும்பி பார்க்க வைத்தது. அந்த வகையில் இந்த 21-ஆம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சி தமிழன்னை உலகின் உச்சிக்கு

* உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.

கைப்பேசி: 9095683876, மின்னஞ்சல்: 27annemary@ymail.com

கொண்டுபோய் வைத்துள்ளது. இன்று உலகில் ஆங்கிலம் இல்லாத நாடே இல்லை என்பதுபோல தமிழன் இல்லாத நாடும் இவ்வுலகில் இல்லை. தமிழன் தான் சென்ற இடத்தில் எல்லாம் சிறப்பு பெற்று வாழ்கிறான். அவன் என்னதான் அயல்நாட்டு கலாச்சாரத்தில் வாழ்ந்தாலும் தமிழ்நாட்டுக் கலாச்சாரம் அவனைவிட்டு விலகுவதே இல்லை. அந்நாட்டு வாழ்வு முறையோடு சேர்ந்து தமிழ்நாட்டு வாழ்வு முறையும் சேர்ந்து ஒரு பதிய பரிணாமத்தை தருகிறது. அதன் மூலம் அவன் தனித்தன்மை பெற்று விளங்குகிறான். அவனது புதிய சிந்தனைகளில் தோன்றும் கருத்துக்களை வலைதலங்கள் மூலம் உலகம் முழுவதும் பரப்பிட செய்கிறான். காற்றோடு கலந்துவரும் நவீனகால தமிழால் பலர் தமிழின் மீது ஆர்வம் கொண்டு தமிழை கற்கவும், பேசவும், அதன் வாழ்வுமுறையை வாழவும் முற்படுகின்றனர். வலைதளங்கள் மூலம் தமிழ் ஒரு புதிய பரிணாமத்தை பெற்றும் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றியும் செழிக்க செய்கிறது.

## கலாச்சாரம்

இந்த புதிய தொழில்நுட்ப வளர்ச்சி தமிழர் கலாச்சாரத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இருந்த போதிலும் அதன் உண்மையான சாயல் கொஞ்சம் கூட மாறவே இல்லை என்பது தான் தமிழின் மிகப்பெரிய வெற்றி. இப்புதிய தொழில்நுட்பங்கள் தமிழின் கலாச்சாரத்தை உலகின் கடைகோடி வரை கொண்டு போய் சேர்த்துள்ளது. இதனால் தமிழின் மீது அயல் நாட்டவர்க்கும் ஈர்ப்பு அதிகரித்து தமிழின் கலாச்சாரத்தை கற்க அணிஅணியாக படையெடுத்து தமிழ்நாட்டை நோக்கி படையெடுக்கச் செய்துள்ளது. இதனாலேயே தமிழின் மிக்பெரிய காப்பிங்களும், நூல்களும் அயல்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள் உலகப்பொதுமறையாய் விளங்குகிறது. தமிழரின் கலாச்சாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஆலய வழிபாடுகளும், கட்டட கலைகளும் அயல் நாட்டவரை அன்னாந்து பார்க்க வைத்துள்ளது. இந்த பெருமைக்கு முக்கிய பங்கு வகிப்பது இன்றைய தொலைதொடர்பு சாதனங்களே என்றால் மிகையாகாது. அயல்நாட்டு கலாச்சாரங்கள் சில தமிழரின் கலாச்சாரத்தில் மேலோட்டமான சில மாற்றங்களை மட்டுமே ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அதனால் உள்ளார்ந்த மாற்றம் ஒன்றையும் ஏற்படுத்த முடியவில்லை.

**"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**

**புறத்த புகழும் இல"**

என்ற வள்ளுவரின் கூற்று இன்றும் உண்மையாகிக் கொண்டுதான் இருக்கிறது. இது எத்தனை காலம் கடந்தாலும் பொய்க்காது.

## பண்பாடு

மிகவும் பழமை வாய்ந்த பண்பாடாகிய தமிழர் பண்பாடு இன்றைய தொலைதொடர்பு சாதனங்களின் வளர்ச்சியாலும் அதன் ஆதிக்கத்தாலும் சிறிதாக விரிசல் காண ஆரம்பித்துள்ளது. இதனால் அகவாழ்வு, புறவாழ்வு மாசுற தொடங்கியுள்ளது. இதனால் புதிய கோட்பாட்டுக்கோடுகள் தமிழ் பண்பாட்டிற்கு இடப்படுகிறது.

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**அய்யர் யார்த்தனர் கரணம்"**

இப்படி பொய்யும் வழுவும் தோன்றிய போதிலும் இன்றைய கவிஞர்களின் படைப்புகளாலும், காவியங்களாலும் தமிழ் பண்பாடு மீண்டும் தலைநிமிர்ந்து தமிழை ஒரு புதிய அரியணைக்கு ஏறச்செய்கிறது. அவர்களின் படைப்புகள் வலைதளங்கள் மூலம் உலகில் உள்ள அனைத்து தமிழரையும் சென்றடைந்து அவனது பண்பாட்டை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கிறது. அவன் தன் பண்பாட்டை மறந்துவிடாமல் இருக்க இதுவே பெரும் உதவி செய்கின்றது. வந்தோரை இன்முகத்தோடு வரவேற்பது, உணவு அளிப்பது,

உதவி செய்வது, சேவை மனப்பான்மையோடு ஊழியம் செய்வது என்று பலவற்றிலும் தமிழன் தலை நிமிர்ந்து நிற்கிறான். இது அவன் வாழும் பகுதியில் அவனை தனித்தன்மைப்படுத்தி காட்டுகிறது. இன்றைய நவீன உலகில் அவன் தன் பண்பாட்டை மறக்காமல் இருக்க மிகவும் உதவியாக இருப்பது இந்த தொலைதொடர்பு மற்றும் அச்சுவழி ஊடகங்கள் மட்டுமே என்பது உறுதி.

## கல்வி மற்றும் இலக்கியம்

மாறிவரும் நவீன கால கல்விமுறையில் ஆங்கிலத்திற்கு நிகராக தமிழும் முன் வைக்கப்படுகிறது. இந்த 21-ஆம் நூற்றாண்டில் கணினி வழி தகவல் தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் அச்சுவழி தொலைத்தொடர்பு சாதனங்கள் வழியாக நாள் ஒன்றுக்கு பல லட்சக்கணக்கான தகவல்கள் தமிழில் பரிமாறப்படுகின்றன. இதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் கல்லூரி இளைஞர்கள்தான்.

**"பறைச்சி ஆவதேதடா பனத்தி ஆவதேதடா**

**இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டிருக்குதோ"**

என்று சாதிகளுக்கு எதிராகவும்

**"காலை மாலை நீரிலே முழ்கும் மந்த மனிதர்கள்**

**காலை மாலை நீரிலே கிடந்த தேவை என்பெறும்?"**

என்று சடங்குகளுக்கு எதிராகவும் அப்பொழுதே தமிழனின் சிந்தையை தூண்டி சித்தர்களின் சிந்தனைகள் இன்றைய இளைஞர்களின் சிந்தையையும் ஆவேசத்துடன் தூண்டுவதற்கு முக்கிய பங்காளியாக இருப்பது இன்றைய தொலைதொடர்பு சாதனங்கள்தான். என்னதான் அவன் நவீன முறை கல்வியை கற்றாலும் அவனது இரத்தத்தில் கலந்த தமிழ் அவனது கல்வியறிவை மேலும் சிறப்படைய செய்கிறது. இன்றைய இளைஞர்களுக்கு திருக்குறளை தெளிவுரை வைத்து படித்தாலே புரியவில்லை என்றும் நொடிப்பொழுதில் கவிதை தொடுக்கும் காலம் யாவும் மலையேறிவிட்டது என்றும் புலம்பும் பல தமிழ் ஆர்வளர்க்கும் சொல்ல விரும்புவது என்னவென்றால் வலை தலத்தில் வலையவரும் திருக்குறளை உலகில் உள்ள பல ஆயிரம் தமிழர்களும் அயல்நாட்டவரும் விரும்பிபடித்து ஆய்வு செய்கின்றனர். மேலும் இன்றைய இளைஞர்களும் புதுக்கவிதை என்ற முறையில் எளிய நடையில் சாதாரண பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் சிறப்பாக கவிதைகள் படைக்கின்றனர். ஹைகூ என்ற இரண்டு மூன்று வரி கவிதைகளும் இன்றைய நூற்றாண்டில் சிறப்பு பெற்று விளங்குகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட பல மாற்றங்களை ஏற்றிக்கொண்ட நாம் இதை ஏன்? வெறுக்க நினைக்கிறோம். இந்த நவீன தொலைதொடர்பு சாதனங்கள் வழியாக தமிழன்னை ஏறியிருக்கும் இந்த புதிய அரியணையில் இருந்து சிறப்பாக ஆட்சி செய்து தன் நிறம் மாறாது காத்து வருவாள் என்பது உறுதி.

## முடிவுரை

தமிழின் முதல் எழுத்தான 'அ'வின் முதல் பகுதி (அ) ஆதி மனிதனையும் பின்னால் உள்ள கோடு அவன் முதுகில் சுமந்த வில்லையும் குறிக்கின்றதாம். இதில் இருந்தே தமிழ் எவ்வளவு பழமையானது என்று அறிய முடிகின்றது. அன்று தொடங்கிய அதன் இனிமையும் சுவையும் இன்றுவரை குறையவேயில்லை. அதன் நடை மாறலாம் ஆனால் அதன் நிறம் என்றுமே மாறாது. இந்த நவீனகால தொலைதொடர்பு சாதனங்களும் தமிழின் அடுத்தகட்ட வளர்ச்சியே அன்றி வீழ்ச்சி அல்ல. எனவே இந்த 21-ஆம் நூற்றாண்டில் மின் அலைதகவல் பரிமாற்றம் என்ற புதிய அரியணை ஏறும் தமிழன்னை இதிலும் சிறப்பு பெற்று விளங்கி வெற்றிபெறுவாள் என்பது உண்மையாகும்.